**சேருவில பிரதேச சபை**
**திருகோணமலை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மே 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை மற்றும் முகாமைத்துவ அறிக்கை முறையே 2020 ஆகஸ்ட் 27 மற்றும் 2020 ஆகஸ்ட 27 ஆம் திகதிகளில் தலைவருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து சேருவில பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### (அ) கணக்கீட்டுக் கொள்கை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களை ஒழுங்குபடுத்தலின் போது பின்பற்றப்பட வேண்டிய கணக்கீட்டுக் கொள்கை நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதிக் கூற்றுக்களை ஒழுங்குபடுத்தலின் போது பின்பற்றப்பட வேண்டிய கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்பட வேண்டும். | இதை சரியாக செய்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

#### (ஆ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (i) மீளாய்வாண்டிலே ஒப்பந்தத்திற்குள்ளாகி நடைமுறைக்குள்ளாகியிருந்த 05 முன்மொழிவுகளுக்குரிய ஏற்பாடுகள் அவசியமாகும். பெறப்பட வேண்டிய தொகையாகிய ரூபா 8,033,472 கணக்குகளிலிருறகைவிடப்பட்டிருந்தன. | சரி செய்யப்பட வேண்டும். | இதை சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென்பதை தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | 2019 திசெம்பர் 31 ஆந் திகதிக்கு செலுத்தப்பட வேண்டிய ரூபா 65,734 செலவுகள் மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருக்க வில்லை. | சரி செய்யப்பட வேண்டும். | இதை சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படு மென்பதை தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |
| (iii) | திரண்ட நிதிக் கணக்கிற்கு ஆரம்ப மீதியாக ரூபா 2,715,468 மிகையாக கொண்டு வரப்பட்டிருந்தது. | சரி செய்யப்பட வேண்டும். | இதை சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படு மென்பதை தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |
| (iv) | 2019 ஆம் வருடத்திற்குள் கொள்வனவு செய்யப்பட்ட நிலையான சொத்துக்களின் மொத்தம் ரூபா 838,517 மூலதனத்திலிருந்து வருமானத்திற்கு பங்களிப்பு செய்யும் கணக்கிற்கு செலவு வைக்கப்படாமல் திரண்ட நிதிக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | சரி செய்யப்பட வேண்டும். | இந்த வேறுபாட்டை சரி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படு மென்பதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| **(இ)** | **இணக்கம் செய்யப்படத கணக்குகள**<br>---------------------- | | |
| | நிதிக்கூற்றுக்களில் வர்த்தகத்திற்கான அனுமதிப்பத்திரங்களை பெற்றுக் கொள்ளும் வருமானமாத்திற்கும் பதிவேட்டுக்கும் இடையில் ரூபா 137,660 வேறுபாடொன்று அவதானிக்கப்பட்டது. | வருமான பதிவேடு சரியாக ஒழுங்குபடுத்தப்பட வேண்டும். | வர்த்தக அனுமதிப்பத்திரத்திற்காக பணம் அறவிடும் போது வருமான பரிசோதகர் காசு அறவீட்டாளர் வெவ்வேறாக பணம் அறவிட்டுள்ளனர். காசு அறவீட்டாளர் ஊடாக அறவிடப்பட்ட அனுமதிப்பத்திர வருமானங்கள் விபரம் உரிய பதிவேட்டிற்கு உள்ளடக்கப்படாததன்காரண மாக இந்த நிலைமை நேர்ந்துள்ளது. இதை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |

**1.4 இணங்காமைகள்**

**1.4.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 ஆம் வருட இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டம் | | | |
| (i) | 24 ஆவது பிரிவு | நிர்மாணிக்கப்பட்டுள்ள பாதைகள் இன்வென்ட்ரிக்கு மற்றும் வர்த்தமானி அறிவித்தலுக்கு உட்படுத்த நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | பாதைகள் இன்வென்ட்ரிக்குட் படுத்துதல் மற்றும் வர்த்தமானி அறிவித்தலுக்கு உட்படுத்த நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும். | தற்போது பாதைகள் இன்வென்ட்ரியொன்று தயாரிக்கப்பட்டிருந்ததுடன், எதிர்காலத்தில் அனைத்து பாதைகளும் வர்த்தமானி அறிவித்தலுக்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதையும் தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |
| (ii) | 159 ஆவது பிரிவு | மீளாய்வாண்டின் இறுதியில் அறவிடப்படவேண்டிய ரூபா 6,979,238 ஆன நிலுவை வருமானங்கள் அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நிலுவை வருமானத்தை எதிர்காலத்தில் அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| (ஆ) | 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிருவாக) விதிகள் | | | |
| (i) | 59 ஆவது விதி | சபையின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் இடம் பெறும் வியாபார மற்றும் தொழில் முயற்சிகள் சம்பந்தமாக மதிப்பீடொன்றை பிரதேச சபையினால் மேற்கொண்டிருக்க வில்லை. | வியாபார மற்றும் தொழில் முயற்சிகள் சம்பந்தமாக மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | 2020 ஆம் வருடத்திலிருந்து வியாபார மற்றும் தொழில் முயற்சிகள் சம்பந்தமாக மதிப்பீடொன்றை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன் |
| (iv) | 217 ஆவது விதி | நிலையான சொத்து பதிவேடு நாளது | நிலையான சொத்து பதிவேடு | நிலையான சொத்து பதிவேடொன்று |

| | | | | |
|---|---|---|---|---|
| | | வரையாக்கப்பட்டிருக்க வில்லை | சரியாக நாளது வரையாக்கப்பட வேண்டும் | நாளதுவரையாக்கப் படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| (v) | 218 ஆவது விதி | அனைத்து காணி மற்றும் கட்டிடங்களும் ஒவ்வொரு வருடத்திற்கொரு முறை மதிப்பீடொன்றை மேற்கொண்டிருக்கவில்லை. | காணி மற்றும் கட்டிடங்கள் ஒவ்வொரு வருடத்திற்கொரு முறை மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | அனைத்து காணி மற்றும் கட்டிடங்களும் வருடத்திற்கொரு முறை மதிப்பீட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் ------------------------------- | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 103 (i) (அ) மற்றும் 104 (i) | 2018 ஆம் ஆண்டில் 02 வாகன விபத்துக்களில் இருந்து ரூபா 142,930 இழப்பு ஏற்பட்டிருந்தாலும் நதிப்பிரமாணங்களின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் எடுக்கப்பட வேண்டும். | நிதிப்பிரமாணம் 103 (i) (அ) மற்றும் 104 (i) ஆகியவற்றுக்கு பொருந்தக் கூடிய விதி முறைகளின் படி நடவடிக்கை எடுக்கப்படுமென தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |
| (ii) | நிதிப்பிரமாணம் 110 | 02 சந்தர்ப்பங்களில் இடம்பெற்ற ரூபா 108,194 சேதம் சம்பந்தமாக சேதப் பதிவேட்டில் குறிப்பிடப்பட்டிருக்க வில்லை. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய சேதம் சம்பந்தமாக சேதப் பதிவேட்டில் குறிப்பிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |
| (ii) | நிதிப்பிரமாணம் 571 | 2 வருடங்கள் கடந்துள்ள போதிலும் ரூபா 850,080 ஆன 4 பொது வைப்பு மீதிகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | உரிய ஏற்பாடுகளை சபையின் நிதியத்திற்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |
| (iii) | நிதிப்பிரமாணம் 880 | பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களினால் ஊழியர் பிணை வைப்பு மேற்கொண்டிருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | ஊழியர் பிணை வைப்பு மேற்கொள்வதற்குநடவடிக்கை எடுக்கப்படுமென தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (iv) | நிதிப்பிரமாணம் 1645(ஆ) மற்றும் 1646 | 11 வாகனங்களின் ஓட்டக்குறிப்பு கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | நாளாந்த ஓட்டக்குறிப்பு மற்றும் மாதாந்த பொழிப்பு என்பன குறித்த தினத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென தாழ்மையுடன் அறியத் தருகின்றேன் |
| (ஈ) | 2009 ஏப்பிரல் 16 ஆம் திகதியிடப்பட்ட இல 09/2009 பொது நிர்வாக சுற்றறிக்கை. | மேலதிக நேரம் விடுமுறை நாள் கொடுப்பனவுகள் விரல் அடையாள இயந்திரத்தில் உள்ள நேரத்தின் மூலம் உறுதிப்படுத்தி கொடுக்க வேண்டிய போதிலும் 2019 ஆம் ஆண்டில் ரூபா 145,787 கொடுப்பனவு உள்வருகை மற்றும் வெளிச் செல்லுகை பதிவேட்டில் உள்ள நேரத்தினை அடிப்படையாக கொண்டு கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | சுற்றறிக்கை பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | பொது நிர்வாக இல 09/2009 இன்படி நடவடிக்கை எடுக்கப்படுமென தாழ்மையுடன் அறியத் தருகின்றேன் |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்ககூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 2,730,385 ஆக இருந்ததுடன் அதற்கு எதிரான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவீனத்தை மிஞ்சிய வருமானம் ரூபா 5,913,108 தொகை ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | 2018 | | | | 2019 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட் ட வருமானம் | சேகரிக்கப்பட் ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 | ரூபா000 |
| வாடகை | 3,815 | 4,166 | 3,842 | 324 | 5,423 | 3,469 | 3,975 | 1,547 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 415 | 433 | 433 | - | 545 | 614 | 614 | - |
| ஏனைய வருமானங்கள் | 7,183 | 11,967 | 5,788 | 4,910 | 12,823 | 7,198 | 10,948 | 5,431 |
| மொத்தம் | 11,413 | 16,566 | 10,063 | 5,234 | 18,791 | 11,281 | 15,537 | 6,978 |

### 2.2.2 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2011 ஆண்டிலிருந்து 2018 ஆண்டு வரை கிடைக்கப் பெற வேண்டிய வாடகை வருமானம் ரூபா 1,041,148 ஆகும். | நிலுவைப் பணத்தை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் | சட்ட நடவடிக்கை மூலம் உரிய நிலுவைப் பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

### 2.2.3 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நீதிமன்றத் தண்டப்பணமாக மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 5,431,528 நிலுவைப் பணம் அறவிடுவதற்கு இருந்ததுடன் அதில் ரூபா 1,681,459 முன்னைய வருடங்களுக்குரிய நிலுவைப் பணம் ஆகும். | நீதிமன்ற தண்டப்பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மூதூர் நீதிமன்றத்தினால் கிடைக்கப்பெறவேண்டிய தண்டப்பணம் தொடர்பான விபரங்கள் பெறப்பட்டிருப்பதுடன், உரிய பணத் தொகை பிரதேச சபைக்கு பகுதியாக கிடைக்கப் பெற்றுக் கொண்டிருப்பதாக தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) உப விதிகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 126 ஆவது பிரிவின் கீழ் பிரதான விடயங்கள் 28ஐ நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட்ட | உபவிதிகளை அவசரமாக விதிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் உபவிதிகள் விதிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |

வேண்டியிருந்தும் 2019 திசெம்பர் 31 திகதியாகும் போது உப வழிகள் விதிக்கப்பட்டிருக்க வில்லை.

**(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆம் வருடத்தின் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று ஒழுங்குபடுத்தப் பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல் நடவடிக்கை ஒழுங்கு படுத்தப்பட வேண்டும். | எதிர்காலத்தில் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

**(இ) திண்மக்கழிவு முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| திண்டக்கழிவு முகாமைத்துவம் முறையாக செய்யப்படவில்லை. | திண்டக்கழிவு முகாமைத்துவம் சம்பந்தமாக முறையான வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். | திண்மக் கழிவு முகாமைத்துவம் சம்பந்தமாக சரியான வேலைத் திட்டமொன்று எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படு மென்பதை தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையினால் 2017 ஆம் 19 ஆம் இலக்க நிலைபேறான அபிவிருத்தி சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கம், இலக்கு மற்றும் உரிய நிரல்கள் மீளாய்வாண்டிலே அடையாளம் கண்டிருக்கவில்லை. | நிலைபேறான அபிவிருத்திச் சட்டத்தின் பிரகாரம் வேலைத் திட்டங்கள் அவசரமாக நடைமுறைப் படுத்தப்பட வேண்டும். | நிலைபேறான அபிவிருத்தியின் இலக்கை அடைந்து கொள்வதற்கு தேவையான வேலைத்திட்டங்கள் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தாழ்மையுடன் அறியத்தருகின்றேன். |

**3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2 பிரதேச சபைக்கு சொந்தமான ஒரு கட்டிடம் மாத வாடகைக்கு ரூபா. 18,343 மருத்துவ மையமாக பராமரிக்க வழங்கப்பட்டிருந்தும் சபையினால் உரிய கட்டிடத்தின் மதிப்பீட்டை பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ப்படவில்லை. | மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதியில் வட்டி வசூலிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மதிப்பீட்டுத்துறையில் அதிகாரிகள் வருகை தந்து ஆய்வு செய்து அளவிட்டுள்ளனர் மற்றும் எதிகாலத்தில் அவர்களிடமிருந்து தொடர்புடைய மதிப்பிடப்பட்ட மதிப்புக்களை பெறமுடியும் என்பதை நான் தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) 2012 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்திலிருந்து ஆயுர்வேத வைத்தியர் பதவி வெற்றிடமாக காணப்படுகின்றது. | ஆயுர்வேத வைத்திய உத்தியோகத்தர் நியமிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | ஆயுர்வேத வைத்தியரொருவரை பெற்றுத் தருமாறு கோரிக்கை இடப்பட்டுள்ளதுடன் எதிர்காலத்தில் ஆயுர்வேத வைத்தியரொருவரை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாகவும் தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |
| (ஆ) 08 பதவிகளுக்கான 09 உத்தியோகத்தர்களின் வெற்றிடங்களை பூரணப்படுத்தப்படவில் லை. | வெற்றிடங்களை பூரணப்படுத்தித் தருமாறு கோரிக்கை இடப்பட வேண்டும். | உரிய வெற்றிடங்கள் எதிர்காலத்தில் பூரணப்படுத்திக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமென தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |
| (இ) 04 பதவிகளுக்காக 10 உத்தியோகத்தர்கள மேலதிகமாக ஆட்சேர்க்கப்பட்டுள்ளன. | அங்கீகரிக்கப்பட்ட ஊழிய எண்ணிக்கையை விஞ்சிவிடாத வண்ணம் ஊழியர்கள் ஆட்சேர்க்கப் படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | சபையின் வேலைகள் விஸ்தரிப்பு காரணமாக சபையின் அனுமதி மற்றும் உள்ளூராட்சி ஆணையாளரின் அனுமதியுடன் பதில் அடிப்படையில் இந்த ஆட்சேர்ப்பு இடம்பெற்றுள்ளதாக தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |

### 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 விளைவற்ற சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| ரூபா 100,000 கிரயத்தையுடைய உழவு இயந்திர இழுவை பெட்டியொன்று 03 வருடங்களாக விளையாட்டு மைதானத்தில் அழிவடைந்துள்ளது. | பொருத்தமான முறையில் நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | இந்த இழுவைப் பெட்டியை முறையாக நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |

### 3.4.2 உரிமை மாற்றம் செய்யப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (அ) வனசீவராசிகள் திணைக்களம் மற்றும் பிரதேச செயலாளர் காரியாலயத்திற்கு சொந்தமான 25 காணிகளில் சபையினால் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியாகும் போது ரூபா 68,008,546 வினாலான விளையாட்டு மைதானம் பொதுக் கிணறு, சனசமூக நிலையம், நீர்த்தாங்கி, மயானம் மற்றும் பொதுச் சந்தைகள் ஆகியன நிர்மாணிக்கப்பட்டிருந்தாலும் இந்த காணிகளின் சட்டபூர்வமான உரிமையை சபைக்கு மாற்றிக் கொண்டிருக்கவில்லை. | காணிகளின் சட்ட பூர்வமான உரிமை பிரதேச சபைக்கு மாற்றப்பட வேண்டும். | இந்த காணிகளை சட்டபூர்வமாக மாற்றிக் கொள்வதற்கான உரிய நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருப்பதாக தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |
| (ஆ) 09 வாகனங்களை பிரதேச சபைக்கு சொந்தமாக்குவதற்காக நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | வாகனங்களின் உரிமையை முறையாக பிரதேச சபைக்கு மாற்றிக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | விடையளிக்கப் படவில்லை. |

### 3.4.3 குறைப் பயன்பாட்டுச் சொத்துக்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 05 வாகனங்கள் 02 வருடங்களிலிருந்து 05 வருடங்கள் வரையான காலமாக செயலிழந்த நிலையில் காணப்படுகிறது. | திருத்தங்களை மேற்கொள்வதற்கோ அல்லது நீக்குவதற்கோ நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | செயழிலந்து காணப்படுகின்ற வாகனங்கள் தொடர்பாக சபை அங்கீகாரம் பெறப்பட்டு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக தாழ்மையுடன்அறியத் தருகின்றேன். |

### 3.5 பெறுகைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | நிச்சயித்த விபரங்கள் மற்றும் பெறுமதிகள் என்பவற்றை குறிப்பிட்டு பெறுகைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட வேண்டும். | பெறுகைகள் திட்டமொன்றை தயாரிப்பதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |
| (ஆ) | மீளாய்வாண்டிலே தொழில்நுட்ப மதிப்பீடின்றி ரூபா 184,990 பெறுமதியான குளிரேற்றி இயந்திரமொன்று கொள்வனவு செய்தல் மற்றும் ரூபா 281,301 ஆன யானை அரண் நிர்மாணிக்கும் ஒப்பந்தமொன்று வழங்கப்பட்டிருந்தது. | தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப்பட்டு பெறுகைகள் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் மதிப்பீட்டிற்கு உட்படுத்தப்பட வேண்டும். | தற்போது தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவொன்று நியமிக்கப் பட்டுள்ளதுடன் இனிவரும் காலங்களில் தொழில்நுட்ப மட்டத்திலான பொருட்கள் மற்றும் சேவைகளுக்காக தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரையை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுமென்பதை தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |

## 3.6 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) ஒப்பந்தத்தின் முழுப் பெறுமதி ரூபா 2 மில்லியனை விஞ்சிவிடக்கூடாது என குறிப்பிடப்பட்டிருந்தாலும் இது தொடர்பான பரிசீலனை செய்யப்படாமல் தெஹிவத்த கிராம அபிவிருத்தி சங்கத்திற்கு எல்லையை விஞ்சும்படியான ரூபா 2,473,481 வுக்கு 03 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தது. | ஒப்பந்தங்கள் வழங்கும் போது உரிய எல்லையை விஞ்சிவிடாமல் ஒப்பந்தங்கள் விநியோகம் இடம்பெற வேண்டும். | இனிவரும் காலங்களில் ஒப்பந்தங்களை வழங்கும் போது ரூபா 02 மில்லியன் எல்லையை விஞ்சிவிடாமல் கண்காணிக்கப்படும் என்பதை தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |
| (ஆ) நிதி மற்றும் திட்டமிடல் அமைச்சின் நிதிப் பிரமாண 1/2012 ஆம் இலக்கமுடைய 2012 சனவரி 05 ஆந் திகதிய சுற்றுநிருபத்தின் 3.1 இன் பிரகாரம் அவ்வாறு நிதி வல்லமையை பரிசீலிக்காது ரூபா 450 இலிருந்து ரூபா 75,993 ஆன வங்கி மீதிகளைக் கொண்ட சங்கங்களுக்கு ரூபா 7,177,296 விலான 15 ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டிருந்தது. | சுற்று நிருபத்தின் பிரகாரம் மதிப்பீடொன்று மேற்கொள்ளப்பட்டு நிதி மற்றும் ஏனைய இயலுமைகளை பரிசீலித்த பின்னர் மாத்திரம் ஒப்பந்தங்கள் வழங்கப்பட வேண்டும். | சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தரின் பரிந்துரைகள் சனசமூக சபைகளுக்கு ஒப்பந்தங்கள் வழங்கும் போது பெற்றுக் கொள்ளப்படும். புதிதாக நிறுவப்பட்ட சனசமூக சபைகளை வலுவூட்டுதல் மற்றும் அந்த சங்கத்தின் ஊடாக அதிகார எல்லைக்கு சேவையை பெற்றுக் கொள்ளும் நோக்கத்தில் நிதி வல்லமை குறைந்த மட்டத்தில் காணப்பட்டாலும் அந்த சங்கங்களுக்கு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளன. தற்போது அந்த சங்கங்கள் சுய நிதி வல்லமையை இதனூடாக விருத்தி செய்திருப்பதுடன் சனசமூக சபைகளை வலுவூட்டும் நோக்கில் இவ்வாறு ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளதுடன் உரிய சனசமூக சபையினால் அந்த ஒப்பந்த வேலைகள் வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டுள்ளதுடன் தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | அவசர வேலையொன்றாக கருதி சேருவில வணக்க ஸ்தலத்திலுள்ள வாகன தரப்பிடத்தைச் சுற்றி யானை அரண் ஒன்றை நிர்மாணிப்பதற்காக ரூபா 281,301 செலுத்தப்பட்டிருந்தாலும் யானை அரணுக்காக உபயோகப்படுத்தியிருந்தது. தூண் தரக் குறைவாக இருந்ததுடன் 3 அல்லது 4 அங்குல வட்டத்தை கொண்டிருந்ததுடன் மற்றும் பயன்படுத்திய மரக் கட்டையை சரியாக கருப்பெண்ணையில் மூழ்கச் செய்யாததன் காரணமாகவும் பரீட்சித்தல் சந்தர்ப்பத்திலேயே அரித்து சேதத்திற்குள்ளாகி யிருந்தது. இதனால் யானை அரண் காணப்படுதல் சம்பந்தமாக பிரச்சினை உருவாகியிருந்தது. | அத்தியாவசிய அவரச தேவையாக இருந்தாலும் செலவுக்கான பலன் கிடைக்குமாறு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். | சேருவில வணக்கஸ்தலத்தை அண்மித்த பிரதேச காட்டு யானைகளின் தாக்கம் மிக மோசமான நிலையில் காணப்பட்டதுடன் ஸ்தலத்திற்கு வருகை தருகின்ற இறைவழி பாட்டாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதற்கு முன்னர் யானை அரண் நிர்மாணிப்பது தேவையாக இருந்தது. இருப்பினும் குறைந்த வருமானம் கிடைக்கின்ற பிரதேச சபை என்பதால் அதற்கான நிதி ஏற்பாட்டை ஒதுக்குதல் கடினமானதாகும். இதனால் பதப்படுத்தப்படாத மரத்தூண்களை பயன்படுத்தி குறைந்த செலவில் யானை அரண் நிர்மாணிக்கப்பட்டது. |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிலே கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு தாபிக்கப்பட்டு கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட வேண்டும். | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு முறையாக நடாத்தப்படுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்வதாக தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |

4.2 தீர்க்கப்படாத கணக்காய்வு அவதானிப்பு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| நகர அலங்காரம் மற்றும் சபைக்கு வருமானமொன்றை ஈட்டிக் கொள்ளும் நோக்கத்தில் பிரதேச சபையினால் விளம்பர பிரச்சாரத்திற்காக LED விளம்பரப் பதாகையொன்றை பொருத்துவதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 938,000 செலவு செய்யப்பட்டிருந்தது. இந்த விளம்பர பாதாகையை செயற்படுத்தும் போது ஈடுபடுத்தப்பட வேண்டிய ஒளியின் அளவு மற்றும் விளம்பரப் படுத்தமுடியுமான விளம்பரங்களின் அளவு தொடர்பானவற்றை கவனத்திற் கொள்ளாமல் நடவடிக்கை மேற்கொண்டதனால் 2014 மார்ச் 17 ஆந் திகதியிலிருந்து செயலிழந்துள்ளது. இதனால் இதற்காக செலவு செய்யப்பட்ட பணம் விளைவற்ற செலவாக உள்ளது. | குறைபாடுகள் சரி செய்யப்பட்டு துரிதமாக பாவனைக் குட்படுத்தப்பட வேண்டும். | இந்த LED விளம்பர பாதாகை திருத்தங்களை மேற்கொள்வதற்காக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள தென்பதுடன் கொரோனா தொற்று காரணமாக அந்த நடவடிக்கை தாமதமானதுடன் மிக விரைவாக இதை செயற்படுத்தும் நிலைமைக்கு மாற்றி மீண்டும் பொருத்துவதற்கு முடியுமென்பதை தாழ்மையுடன் அறியத் தருகின்றேன். |